**செய்தி வெளியீடு எண்:1310** **நாள்:10.12.2021**

செய்தி வெளியீடு

பெரும்புலவன் பாரதியார் அவர்களின் 140ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, நாளை 11.12.2021 காலை 10.00 மணியளவில், தமிழ்நாடு அரசின் சார்பில் சென்னை, மெரினா கடற்கரை, காமராஜர் சாலையில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலையின் கீழ் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தவுள்ளார்கள். இந்நிகழ்ச்சியில், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரத்தில்1882 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 11ஆம் நாள் பிறந்த மகாகவி பாரதியார் அவர்கள், தனது ஏழாம் வயதிலேயே தமிழ்க் கவிதைகளை விரைந்து இயற்றிடும் ஆற்றலையும் பெற்றிருந்தார். மகாகவி பாரதி 'தமக்குத் தொழில் கவிதை இயற்றுதல்' என்பதை எங்கும் பெருமையோடு எடுத்துரைப்பார். நம் தாய்நாட்டின் விடுதலைக்கு உணர்ச்சிமிகு பல பாடல்களால் உரமிட்டது வரலாறு. எந்நிலையிலும் தன்நிலை தாழாமல்; தளராமல்; கடின மன உறுதியோடு வலம் வந்தவர். 17 ஆண்டுகளாக சுதேசமித்ரன், இந்திய சக்கரவர்த்தினி, பால பாரதம் போன்ற பல பத்திரிகைகள் வாயிலாக சிறந்த கட்டுரைகளையும், அனல் தெறிக்கும் கவிதைகளையும் எழுதி, நாட்டு மக்களின் உள்ளங்களில் சுதந்திர தாகத்தை பெரிதும் வளர்த்தவர். பெண் விடுதலைக்காக எழுச்சிமிகுந்த பாடல்களை எழுதியுள்ளதோடு, குழந்தைத் திருமணத்தைத் தொடக்கம் முதற்கொண்டு எதிர்த்தவர். தாய்மொழித் தமிழைத் தெய்வமாகப் போற்றியவர், "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்" என்று கர்வத்தோடும், கம்பீரத்தோடும் உலகினிற்குப் பறை சாற்றியவர் மகாகவி பாரதியார்.

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் ஆட்சிக்காலத்தில் 1968 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகத்தமிழ்நாட்டினை முன்னிட்டு, தமிழுக்கு அருந்தொண்டாற்றிய பெரும்புலவன் பாரதிக்கு சென்னை கடற்கரைச் சாலையில் மகாகவி பாரதியார் அவர்களின் முழுவுருவச் சிலை அமைத்து பெருமை கொண்டது. மேலும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில், 1973ஆம் ஆண்டு எட்டயபுரத்தில் மகாகவி பாரதி பிறந்த வீடு அரசுடமையாக்கப்பட்டு, நினைவு இல்லமாகத் திறந்து வைக்கப்பட்டது.

மேலும் பெரும்புலவன் பாரதிக்குப் பெருமை சேர்க்கின்ற வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சிக்காலங்களில், சென்னை பைகிராப்ட்ஸ் சாலை 'பாரதியார் சாலை' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 1989 ஆம் ஆண்டு கோயம்புத்தூரில் உள்ள பாரதியார் பல்கலைக் கழக வளாகத்தில் மகாகவி பாரதியாரின் திருவுருவச் சிலை நிறுவப்பட்டும், 1996ஆம் ஆண்டு சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள பாரதியார் இல்லம் புதுப்பிக்கப்பட்டதோடு, நூலகம் அமைக்கப்பட்டு, பொதுமக்களின் பார்வைக்கும் திறந்து வைக்கப்பட்டது. 1997 ஆம் ஆண்டு "பாரதியார் விருது" தோற்றுவிக்கப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் மகாகவி பாரதியாரின் நினைவினைப் போற்றுகின்ற வகையில், அவர் மறைந்த நூற்றாண்டின் நினைவாக, 14 முத்தான அறிவிப்புகளை அறிவித்தார். அவற்றில் குறிப்பாக, பாரதியாரின் நினைவு நாளான செப்டம்பர் 11ஆம் நாள் அரசின் சார்பில் ஆண்டுதோறும் "மகாகவி நினைவு நாளாக" கடைப்பிடிக்கப்படும் என்று அறிவித்தார்கள். ஓராண்டுக்குத் தொடர் நிகழ்ச்சிகள் நடைபெறும் என்றும் அறிவித்துள்ளதன் அடிப்படையில், சென்னை திருவல்லிக்கேணி பாரதியார் இல்லத்தில் 44 வாரங்களுக்கான தொடர் நிகழ்ச்சிகளில் முதல் நிகழ்ச்சியானது மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்களால் கடந்த 04.12.2021 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. ஒவ்வொரு வாரமும்

சனிக்கிழமையன்று பாரதியின் புகழ்பாடும் பல்வேறு கலைநிகழ்ச்சிகளும் கவியரங்கங்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் மகாகவி பாரதி நினைவு நாள் விழா பேருரையில் "பெரும்புலவன் பாரதி மறைந்து 100 ஆண்டுகள் கடந்தாலும், அவரின் சிந்தனைகள் யாருக்கும் கட்டுப்படாத சுதந்திர சிந்தனைகளாகும். குடும்பமாக இருந்தாலும், சாதியாக இருந்தாலும், மதமாக இருந்தாலும், அரசாக இருந்தாலும் எந்த அடக்குமுறையையும் எதிர்த்துக் கேள்வி கேட்டவர் பாரதியார். அன்பு வேண்டும் – அறிவு வேண்டும் – கல்வி வேண்டும் – நீதி வேண்டும் இந்த நான்கையும் பாரதி என்றும் விரும்பினார். இன்றும் நமக்கு பெரும்புலவன் பாரதி அவசியம் தேவை" என்று பெருமிதத்தோடு குறிப்பிட்டார்.

இத்தகைய மாபெரும் சிறப்புமிக்க மகாகவி பாரதியார் அவர்களின் பிறந்த நாளான டிசம்பர் 11ஆம் நாள் தமிழக அரசின் சார்பில் ஆண்டுதோறும் சென்னையிலும், எட்டயபுரத்திலும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**